தனிப் பிரதி ரூ. 10/-
ஆண்டுச் சந்தா ரூ. 100/-
ஆயுள் சந்தா ரூ. 1000/-

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 11 / இதழ் : 7 / மே - 2015



**"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து... எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்"...**

அப்போஸ்தலர் 1 : 8

ஆசிரியர், பேராயர். வே. தேவதாஸ்

**அலகாபாத் பைபிள் செமினெரியில் தொலைதூரக் கல்வி மூலம் B.T.S. (Bachelor of Theological Studies - 4 years) வேதாகம படிப்பை முடித்து பட்டம் பெற்றுள்ள நமது ஷாலோம் ஊழியர்கள் (04.04.2015)**





பட்டம் பெற்ற நமது 13 ஷாலோம் சுதேச ஊழியர்களுடன்
Rev. Dr. சுந்தர்ராஜ் (Principal, Allahabad Bible Seminary),
Rev. சைலேந்தர் (Registrar, Allahabad Bible Seminary),
நமது ஷாலோம் பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்பம் மற்றும்
Rev. R.K. கமித் (CNI போதகர், தாகோத், குஜராத்) அவரது குடும்பத்தினர்



# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை - 29.03.2015



தேவனுடைய பெரிதான கிருபையினால் நாகர்கோவில் கல்வாரி லுத்தரன் திருச்சபையில் 29.03.2015 அன்று நடைபெற்ற ஞாயிறு மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையில் **Rev. G. சகாயதாஸ்** அவர்கள் தலைமையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. ரமேஷ்பாய் டின்டோடு அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த ஆராதனையில் சகோ. சாம் குணசீலன் அவர்கள் மிஷனெரியை அறிமுகம் செய்தார்கள். மிஷனெரி தனது சாட்சியை பகிர்ந்து கொள்ள சகோ. டேவிட் அவர்கள் மொழிபெயர்ப்பு செய்தார்கள். மேலும் சகோ. செல்வதுரை அவர்கள் நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த மிஷனெரி பிரதிஷ்டைக்கு வாய்ப்பளித்து மிஷனெரியைத் தாங்க முன் வந்த **Rev. G.** சகாயதாஸ், **Rev. J.** ஜாண்தாஸ் & சபை செயலர் சகோ. **A.** ரவிச்சந்திரன் ஆகியோருக்காகவும் திருச்சபை மக்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## உங்கள் சகோதரனிடமிருந்து



***கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,***

***இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.*** தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், உதாரவத்துவமான காணிக்கைகளினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் வளர்ந்து வருகிறது. சபைகள் பெருகி வருகிறது. தேவனுக்கு மகிமை செலுத்தி இயேசுவின் நாமத்தில் நன்றி கூறுகிறேன்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் மூன்று மாநிலங்களிலும் உள்ள அனைத்து கிராம சபைகளின் விசுவாசிகள் பல்லாயிரம் குடும்பங்கள் 40 நாட்கள் உபவாசித்து தங்களுக்காக, சபைக்காக, தேசத்திற்காக கருத்தாக ஜெபித்து முடித்தார்கள். ஏப்ரல் முதல் வாரம் (Passion Week) நாட்களில் புதிதாக ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்ட 2750 பேர்கள் திருமுழுக்கு பெற்றார்கள். பெரிய வியாழன் அன்று திரளான சபையில் இராப்போஜன ஆராதனையில் பங்கு பெற்று பெரிய வெள்ளிக்கிழமையன்று கிறிஸ்துவின் பாடுகளையும், கல்வாரி அன்பையும் நினைத்து தங்களை அர்ப்பணித்தார்கள். 5.4.2015 ஞாயிறு அன்று உயிர்த்தெழுந்த திருநாள் அனைத்து சபைகளிலும் ஆவியின் நிறைவுடன் கொண்டாடப்பட்டது. பல சபைகளில் ஐக்கிய விருந்து ஏற்படுத்தி தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஏப்ரல் 5,6 தேதிகளில் தூத்துக்குடி மாவட்டம் இடையன்விளை இம்மானுவேல் ஜெப வீட்டிலிருந்து அன்பு சகோதரி **பொன்சீலி** மற்றும் அவர்கள் கணவர் **சாமுவேல்,** கோயமுத்தூரில் உள்ள அவர்கள் மகன் **ஜெயராஜன் நெல்சன்** அவர்கள், மற்றும் சகோதரர் **ஐ. எபனேசர்** பணித்தளத்திற்கு வருகை தந்தார்கள். அவர்கள் குடும்பத்தின் சார்பில் கட்டப்பட்ட மத்தியப்பிரதேசத்தில் உள்ள உதய்பூரா ஆலயம் மற்றும் இராஜஸ்தானில் பொட்டேலியா ஆலயம் **சகோ. சுரேஷ்** (Ireland )அவர்கள் மூலமாக கட்டப்பட்ட ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். தேவ நாமம் மகிமைப்பட்டது.

முன்பதாக கடந்த மார்ச் மாதம் 28,29 தேதிகளில் சென்னை MCC Matriculation Hr. Sec. School முதல்வர் **சகோதரி. ரேவதி போன்ஸ்** மற்றும் சகோதரி **கிறிஸ்டினா (ஆசிரியை)** அவர்களும் வந்து பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்கள் சார்பில் கட்டப்பட்ட குஜராத்திலுள்ள போர்பானி கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்யவும், மேலும் பணித்தளங்களை பார்வையிட்டு கல்வி பணிகளுக்காக ஜெபித்து திட்டமிட முன்வந்துள்ளார்கள்.

தேவ கிருபையால் மத்தியப்பிரதேசத்தில் தெல்வாணி, மசூரியா இராஜஸ்தானில் காட்டா, காளியா ஆகிய கிராம ஆலயங்கள் ஏப்ரல் இறுதியில் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. மேலும் குஜராத்தில் ரீச்உம்ரா, ஜாலத், மத்தியப்பிரதேசத்தில் அலிப்பூரா, டிக்கிடி, சாலக்கியா, ராம்பூரி, ஹத்யாதல்லி கிராம ஆலயங்களும், இராஜஸ்தானில் ஜாலிம்பூரா, பாடலா கிராம ஆலயங்களும் விரைவில் கட்டப்பட்டு மே மாதம் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

ஆலய கட்டுமான பணிகளுக்காக விசேஷமாக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். இவ்வருட இறுதிக்குள் குறைந்தது 100 கிராம ஆலயங்கள் கட்டப்பட, நிதியாளர்கள் எழும்ப பாரத்துடன் ஜெபியுங்கள்.

தேவ கிருபையால் ஏப்ரல் மாதம் 21–30 வரை 3 மாநிலங்களில் 4 இடங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான CBC ஆசிரியர்கள் இயக்குநர்கள் பயிற்சி நடைபெற தேவன் கிருபை தந்துள்ளார். மே மாதம் முதல் இரு வாரங்களில் 10 நாட்கள் நடைபெறவுள்ள CBC (VBS)-க்காக கருத்தாக ஜெபியுங்கள். எவ்வித தடை பிரச்சனையின்றி பரிசுத்த ஆவியானவர் ஆட்கொண்டு 600 கிராம சபைகளில் உள்ள 40,000 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்கள் இயேசு கிறிஸதுவில் **"நிலைத்திருங்கள்"** என்ற போதனையின் மூலமாக அவர்கள் குடும்பத்தினர் அனைவரும் முழு கிராமமும் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள். குறிப்பாக இதற்கான தேவை **ரூ. 8 இலட்சங்கள்** சந்திக்கப்பட ஜெபியுங்கள். உங்களால் முடிந்த பங்கினை அனுப்புங்கள்.

ஏப்ரல் மாதத்தில் மதுரையிலிருந்து **Rev. சாமுவேல்** அவர்கள் குடும்பம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திலிருந்து **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் குடும்பம், சென்னையிலிருந்து **போதகர் இறையன்பு** அவர்களும் சென்னையிலிருந்து **சகோ. ராபின்சன்** அவர்கள் குடும்பங்களும் வந்து பணித்தளங்களை பார்வையிட்டு ஆலயங்களை பிரதிஷ்டை செய்தார்கள். விபரங்களை அடுத்த இதழில் தருகிறோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆத்தும பாரத்துடன் உருவாக்கி இந்த அன்பு பகிர்வு இயக்க செய்திமலரை உங்களுக்கு அனுப்புகிறோம். இந்த பீல் ஆதிவாசி மக்கள் தரிசனபணிக்கு (ஆண்டுக்கு ஒரு முறையாவது) ஜெபித்து காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறேன். நீங்கள் அப்படி அனுப்பாத பட்சத்தில் உங்களுக்கு தொடர்ந்து இந்த மிஷனெரி பணிக்கான செய்திமலரை அனுப்ப இயலாது என்பதை தெரிவிக்கிறேன்.

மே மாதம் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் குடும்பமாக உங்கள் சபையில் நடக்கும் V.B.S. ல் பங்கு பெற்று ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள். அதிகமான திருமணங்கள், வீடு பிரதிஷ்டை, உறவினர்கள் சந்திப்பது, விடுமுறை நாட்களை குடும்பமாக கழிப்பது போன்ற அனைத்து காரியங்களிலும் தேவன் கிருபைகளை கட்டளையிட்டு தேவைகளை சந்தித்து உங்களை மகிழச் செய்வாராக.

உங்கள் பிள்ளைகளின் தேர்வு முடிவுகள் மற்றும் உயல்கல்வி படிப்பு, வேலைவாய்ப்புகள், திருமண காரியங்கள் போன்ற சந்ததியின் ஆசீர்வாதங்களுக்காக குறிப்பாக நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம்.

**"நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்"** (எபி 6:14) என்ற வாக்குத்தத்தத்தின்படி உங்கள் குடும்பங்களையும், நீங்கள் செய்யும் வேலை மற்றும் தொழில் குறிப்பாக சபைகளிலும், ஊழியங்களிலும் பலமடங்கு ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் V. தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)



# நீங்கள் பெலனடைந்து.... சாட்சிகளாயிருப்பீர்கள்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி பாடுபட்டு, சிலுவையில் தம் ஜீவனை ஈந்தார். அதன் பின்பு வேதவாக்கியங்களின் படி மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். உயிர்த்தெழுந்த பின்பு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பாக நாற்பது நாளளவும் அப்போஸ்தலர்கள், மற்றும் சீஷர்களுக்கு தம்மை உயிரோடு எழுந்தவராக தம்மைக் காண்பித்தார் (அப். 1:3) அந்த பரத்துக்கேறின குறிப்பிட்ட அந்த நாளில் அனைவரையும் இயேசு அழைத்து தம் இறுதி வார்த்தைகளை கூறி ஆசீர்வதித்து பின்பு மேகங்கள் நடு வே எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர் பரத்துக்கேறும் போது கூறிய மிகப்பெரிய வாக்குத்தத்தமும், பிரதான கட்டளையும் என்னவெனில், (அப் 1:8) **“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது .... சாட்சிகளாயிருப்பீர்கள்”** என்பதே. உலகமெங்கும் இந்த மாதத்தில் பெந்தேகோஸ்தே அனுபவத்தைப் பெற்ற அனைவருமே வல்லமையில் பெலப்படவும் இன்னும் சாட்சிகளாய் நிற்கவும் பெந்தேகோஸ்தே நாளை நினைவு கூர்ந்து கொண்டாடுகிறார்கள். நாமும் அப். 1:8 வசனத்தை தியானிப்போம்

**பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டார் (அப். 1:5)**

**பிதாவின் வாக்குத்தத்தம் : காத்திருங்கள்;** முதலாவது பிதாவாகிய தேவன் நம் ஜனங்களுக்காக, சபை விசுவாசிகளுக்காக வாக்குத்தத்தமாக ஆசீர்வாதமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைத் தந்துள்ளார். அப். 2:16–22 வரை வாசித்துப் பாருங்கள் அப்போஸ்தலர், பேதுரு, யோவேல் தீர்க்கதரிசியின் மூலமாக தேவன் உரைத்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதம் என்று விளக்குகிறார். குறிப்பாக அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். யோவேல் 2:28,29–ன் வசன வாக்குகள் **பிதாவாகிய தேவன் மாம்சமான யாவர்மேலும், குமாரர் குமாரத்தி, வாலிபர்கள், மூப்பர்கள் ஊழியக்காரிகள் அனைவர் மீதும் பின்மாரி மழையாக அபிஷேகத்தை ஊற்றி நிறைவேற்றும்படியாக பரிசுத்த ஆவியானவரை தந்துள்ளார்.**

குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் யோவான் 14ம் அதிகாரத்தில் 16ம் வசனம், 26ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள் **நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு**

**நினைப்பூட்டுவார்.** பரிசுத்த ஆவியைக் குறித்து இயேசு கிறிஸ்துவும் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறுதலை சீஷருக்கு எடுத்துரைத்துள்ளார். ஆகவே பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனுடைய வாக்குத்தத்த ஆசீர்வாதம். ஒரு தனிப்பட்ட குழுவிற்கோ, சபைக்கோ, பாஷைக்காரருக்கோ உரியது அல்ல. பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் கழுவப்பட்டு பாவ மன்னிப்பைப் பெற்று ஞானஸ்நானம் எடுத்த ஒவ்வொருவருக்கும் அவர் கொடுக்கப்படுகிறார். ஆகவே வாஞ்சையுடன் காத்திருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பெலன் கொடுக்கும் பரிசுத்த ஆவியானவர்**

அப். 1:8ல் வாசிக்கும்போது இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வரும்போது முதலாவது பெலனடைகிறோம் என்று நம்மை பெலப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு சீஷர்கள் நிலமை மிகவும் மோசமாக, பரிதாபமாக இருந்தது.

- சீஷர்கள் யூதர்களுக்கு பயந்திருந்தார்கள்.
- வேதவசனத்தை அறியாதபடி அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டது.
- உயிர்த்தெழுதலின் நம்பிக்கையற்றவர்களாய் இருந்தார்கள்.
- மந்த புத்தியும் அவிசுவாசமுள்ளவர்களாய் இருந்தார்கள்.
- தங்கள் எதிர்காலத்தை குறித்து பயந்திருந்தார்கள்.
- தங்களை சுற்றியுள்ள அரசாங்கம், அதிகாரிகள், மத குருமார்கள் இவர்களைக் குறித்த பயத்தில் நிறைந்திருந்தார்கள்.
- இனி ஊழியம் செய்யமுடியாது என தங்கள் பிழைப்பைத் தேடி சென்றார்கள்.
- இயேசு நம்முடன் இல்லை, இயேசுவைப்போல் நம்மால் ஊழியம் செய்ய முடியாது.
- அவர்கள் அனைவரும் படிப்பறிவு அற்றவர்கள், பேதைகள், உலகத்தில் குப்பையாக, இழிவாகக் கருதப்பட்டார்கள்.

ஆனால் இந்த சுவிசேஷம் அறிவிக்கப்பட இயேசுகிறிஸ்து இவர்களைத் தான் உருவாக்கி இருந்தார். ஆகவே 40 நாட்களுக்குப் பின்பு எங்கும் நீங்கள் செல்லாதபடி 120 பேர்களாக எருசலேமில் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் **காத்திருங்கள்.** அப்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று பெலனடைவீர்கள் என்று கூறினார்.

அப். 2ம் அதிகாரத்தில் பெந்தேகோஸ்தே நாள் வந்தபோது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். பரலோக வல்லமை இறங்கி வந்தது. அக்கினிமயமான நாவுகளை பெற்று அந்நிய பாஷைகளை பேசினார்கள், புது பெலனைப் பெற்றார்கள். அந்த நிமிடத்திலிருந்து பெலனடைந்தார்கள். அனைத்து பயங்கள் நீங்கியது. வசனங்களை தெளிவாக அறிந்து பிரசங்கம் செய்தார்கள். உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு சாட்சிகளாய் இருக்கிறார்கள். விசுவாசத்துடனும் விவேகத்துடனும் ஊழியம் செய்தார்கள். பரலோக நம்பிக்கையுள்ளவர்களாக, எதிர்காலத்தைக் குறித்த பயமின்றி ஊழியம் செய்தார்கள். இனி வாழ்வது இயேசுவுக்காக என்று தங்கள் பிழைப்பை பொருட்டாக எண்ணவில்லை. இன்னும் இயேசு ஜீவிக்கிறார் என்பதை நிரூபித்து இயேசுவின் ஊழியத்தை சீஷர்கள் நிறைவேற்றினார்கள்.

பிரியமானவர்களே, நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நம்மை சுற்றி பல போராட்டங்கள்

எழும்பலாம், ஆவிக்குரிய வாழ்க்கையில் ஜெபிக்க, வேதம் வாசிக்க இயலாதபடி பரிசுத்தமாக ஜீவிக்க முடியாதபடி பலவீனமாக காணப்படலாம். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நம் மீது ஊற்றப்படும்போது தேவன் நம்மை பலப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் தடைகளையெல்லாம் நீக்கி சுத்திகரித்து தேவனுடன் உறவாட கிருபை தருகிறார்.

நாம் ஜெபிக்கும்போது நம்முடன் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளுடன் இணைந்து ஜெபிக்கிறார். வேத வசனங்களை தியானிக்கும்போது ஆவிக்குரிய கண்களை திறக்கிறார். நாம் துன்பத்தின் பாதையில், துயரங்களை கடக்கும் வேளையில் தேற்றரவாளனாக செயல்படுகிறார். என்ன செய்ய வேண்டும் என்று கலங்கும் வேளையில் ஆலோசனை கர்த்தராக செயல்படுகிறார். ஆவியின் வரங்களினால் நிரம்பி நம்மை அவர் நாம மகிமைக்காக பயன்படுத்துகிறார். ஆகவே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் நிறைவை பெற்றவர்களாய் பெலன் கொள்வோம். இப்பொழுதே நாம் ஜெபிக்கும்போது அந்த உன்னதமான பெலனையும், வல்லமையையும் பெற்றுக்கொண்டு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வோம்.

**நீங்கள் . . . சாட்சிகளாயிருப்பீர்கள்**

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதற்கு மூன்று பிரதான காரியங்கள் உண்டு. முதலாவது ஒவ்வொரு விசுவாசிகளின் தனிப்பட்ட வாழ்க்கையில் தேவனுடன் உறவு கொள்ள, ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட்டு முன்னேறி பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். இரண்டாவதாக சபையானது பக்தி விருத்தி அடையும்படியாகவும், பரிசுத்தமடையும்படியாகவும் 5 வகையான ஊழியங்களும் நிறைவேற்றப்பட ஆவிக்குரிய வரங்களினால் நிரப்புகிறார். மூன்றாவதாக பிரதானமான நோக்கம் என்னவெனில் அனைத்து ஆவிக்குரிய அனுபவங்களுடன் உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு சாட்சிகளாய் விளங்கவேண்டும். எப்படி சாட்சியாக விளங்க வேண்டும். பிரதான கட்டளையான **“நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து...” மத்தேயு 28:19.** சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும், சகல ஜாதிகளை சீஷராக்கவேண்டும், ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்.

இந்த பிரதான கட்டளை சபை, சங்கத்திற்கு மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் ஆண்டவர் இயேசு தரும் பிரதான கட்டளை. இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்ற ஒவ்வொரு விசுவாசிகளும் சுவிசேஷத்தை அறிவித்து ஆத்தும ஆதாயம் பண்ணவேண்டும். கர்த்தர் எந்த இடத்தில் வேலைக்கு வைத்திருந்தாலும், தொழில் தந்திருந்தாலும், வீட்டிலே இருந்தாலும் கூட பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்று ஒவ்வொருவரும் ஆத்தும ஆதாயம் செய்து சாட்சிகளாய் விளங்கவேண்டும். ஆதி அப்போஸ்தலர் நடபடிகளை பாருங்கள் **“சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்”.**

**அப். 8:4** ஆகவே பரிசுத்த ஆவியானவர் அபிஷேகத்தை பெற்ற நாம் ஒவ்வொருவரும் அவருக்கு சாட்சியாக விளங்கி ஆத்துமாக்களை சபையில் கொண்டு வருவோம். **“கரையேறி உமதண்டை நிற்கும்போது ஆண்டவா, வெறும் கையனாக உம்மை காண்பேனோ”** என்ற பாடலின்படி அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய சாட்சிகளாய் விளங்குவோம்.

அடுத்தபடியாக பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட சபைகள் கிறிஸ்துவின் சாட்சிகளாக விளங்கவேண்டும். எருசலேமிலும், யூதேயாவிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தம்

சாட்சிகளாய் விளங்க வேண்டும் ஸ்தல சபைகள் ஸ்தல கிராமத்தையும், நகரத்தையும் தேவனண்டை நடத்த விசுவாசிகள் ஊக்கப்படுத்த வேண்டும், ஜெபித்து செயல்பட வேண்டும். நாங்கள் ஷாலோம் கிராம சபைகள்அப்படித்தான் ஜெபித்து இன்னும் ஆதாயம் செய்து முழு கிராமத்தை கிறிஸ்துவண்டை வழி நடத்த போதிக்கிறேன். ஜெபிக்கும் சபையாக, ஆத்தும ஆதாயம் செய்யும் சபையாக , தேவனுக்குக் கொடுக்கும் சபையாக விளங்க வேண்டும். அப்போது தான் பாரத தேசத்தில் உள்ள ஆறு இலட்சத்திற்கும் அதிகமான கிராம சபைகள் இயேசுவை அறிந்துகொள்ளும்.

அடுத்தபடியாக **"நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று" (1தெசெலோ1:6–8)** வசனத்தின்படி தெசெலோனிக்க சபை பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தில் நிரப்பப்பட்டு சுற்றியுள்ள மக்கதோனியா, அகாயா பிராந்தியங்களுக்கு மாதிரியானது மட்டுமல்ல கர்த்தருடைய வசனத்தை பிரசுங்கித்தார்கள். நாங்கள் சுவிசேஷத்தைக் குறித்து ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று பவுல் அடியார் சொல்லும் அளவு **சாட்சியுள்ள சபைகளாக** விளங்கியது. பாரத தேசத்தில் அனைத்து சபைகளும் தெசெலோனிக்கிய சபைகளாக மாறினால் விரைவில் தேசம் தேவனை அறியும்.

கடைசியாய் அப்போஸ்தலர் 13:1,2 வாசித்துப் பாருங்கள் பரிசுத்த ஆவியினால் அந்தியோகியா சபையில் பவுலையும், பர்னபாவையும் **அவர் அழைத்த ஊழியத்திற்கு** பிரித்தெடுத்து அனுப்ப வழிநடத்தினார். ஸ்தல சபை வளர்ச்சியடைய வேண்டும்; சுற்றியுள்ள பிராந்தியங்கள் தேவனண்டை வரவேண்டும் அதே போல் தூரமாக உள்ள மிஷனெரிமார்கள் மாநிலங்கள் சகல ஜாதி பாஷைக்காரர் இரட்சிக்கப்படவேண்டும், சபைகள் கட்டப்படவேண்டும். சபையானது மிஷனெரி தரிசன பணிகளை நடத்த வேண்டும். இல்லையெனில் பரிசுத்த ஆவியானவர் மூலம் அடையாளம் கண்டு மிஷனெரிப்பணிகளைத் தாங்கவேண்டும். 400 வருடங்களுக்கு முன்பாக வில்லியம்கேரி, சீகன் பால்க் போன்ற மிஷனெரிமார்களை பரிசுத்த ஆவியானவர் அனுப்பினபடியால் இன்று பல்லாயிரம் சபைகளை தேவன் தந்துள்ளார். நாமும் திறவுண்ட வாசல் அடைபடுமுன்பு அனுப்புவோம், ஜெபிப்போம், தாங்குவோம். நம்முடைய பீல் சபைகளையும் சொந்த ஜனம் 1 கோடி மக்கள், 7000 கிராமங்கள் இரட்சிக்கப்படுவது மட்டுமல்ல குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்கள் முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கப்படவும்; நற்செய்தி பணியாளர்கள் பிற மாநிலங்களுக்கும் ஷாலோம் சபைகள் மூலம் அனுப்பப்பட போதித்து ஜெபித்து வருகிறோம். நம் தலைமுறையில் நம் தேவனை நம் தேசம் அறியட்டும். **"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" அப். 1:8**



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 700 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 305 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை!

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 500 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள், 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



*பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில*





## 2015 ஆம் வருடத்தில் 100 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப

- ✞ ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 200 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 400 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 1000 பேர்கள் (அல்லது)
- ✞ ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 2000 பேர்கள் (அல்லது)
- ✞ தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்த தேவத் திட்டத்தை நிறைவேற்றும் ஆதரவாளர்களை தேவன் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்பதோடு நீங்களும் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெறுங்கள்.
- ☞ உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்களைக் கட்ட முன்வாருங்கள்.
- ☞ உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது உங்களது உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.

**ரூ. 3 இலட்சங்கள் மற்றும் ரூ. 2 இலட்சங்கள் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனி கிராம ஆலயம் கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை ஆகியன அனுப்பி வைக்கப்படும். மற்றநிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

**நிதி உதவி அனுப்பும் போது *Sharing Love Mission* என்றபெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து 100 கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | SHARING LOVE MISSION (Tuticorin Branch) |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | 106100710400009 (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | 105010100094373 (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | 613901112799 (IFS Code : ICIC0006139) |

## பீல் ஆதிவாசி மக்கள் சபைகளில் தேவனை ஆராதிக்க கிராமிய இசைக்கருவிகள் மற்றும் ஒலி பெருக்கி சாதனங்கள் வழங்குவோம் வாருங்கள்


இசை கருவிகளை மீட்டு சபை மூப்பர்கள்

நம் பாரத தேசத்தில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஷாலோம் ஊழியங்கள் மூலம் 500க்கும் மேற்பட்ட சுதேச ஊழியர்களை எழுப்பவும் 600க்கும் அதிகமான சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். சாராயம் காய்ச்சி, குடித்து,வெறித்து, அசுத்த ஆவியால் கட்டப்பட்டு, சாபத்தில் வாழ்ந்த பீல் மக்கள், இயேசுகிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்று பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் நிறைவுடன் பீலி, பிலோடி, வாகுடி பாஷைகளில் கிராமிய இராகங்களில் பாடல்களை இயற்றி டோலக், தபேலா, ஜால்ரா, குகரா, மஞ்சரி, சிங்கி போன்ற இசைக்கருவிகளை மீட்டி தேவனை துதித்துப் பாடுவார்கள். பொது ஆராதனைகளிலும்; விசேஷித்த கூட்டங்களிலும் குறைந்தது 2 மணி நேரம் நடனமாடி துதித்து பின்பு பயபக்தியுடன் தேவ அன்பை உணர்ந்தவர்களாய் ஆராதனை செய்து இறுதியாக கண்ணீருடன் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பார்கள்.

பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதிகள் கிடையாது. ஆகவே மைக், ஆம்பிளிபயர், ஸ்பீக்கர் பாக்ஸ், கீ–போர்ட், கிட்டார் போன்ற இசைக்கருவிகளை பயன்படுத்த முடியாது. சபை



ஆத்துமாக்களால் நிரம்பி வழியும் போது பிரசங்கம் செய்யும் வார்த்தை பாடல்களை விசுவாசிகள் கேட்பதும் கஷ்டமாக இருக்கும். குறிப்பாக நானும் என் மனைவியும் செல்லும் அநேக கிராமங்களில் இசைக்கருவிகளும் ஒலி பெருக்கி சாதனங்களும் இல்லாமல் பேட்டரி உள்ளடங்கிய Stranger ஒன்றை பயன்படுத்துகிறோம். இவ்வருடத்தில் ஷாலோம் கிராம சபைகளில் நடைபெறும் ஆராதனைகளை உற்சாகப்படுத்த **ரூ. 3500 மதிப்பில்** கிராமிய இசைக்கருவிகளும், **ரூ. 6500 மதிப்பில்** பேட்டரியுடன் கூடிய Stranger (ஆம்பிளிபயருடன் கூடிய ஸ்பீக்கர் பாக்ஸ்) வழங்க ஜெபத்துடன் தீர்மானித்துள்ளோம்.

நம் ஷாலோம் சபைகளில் இவ்வருடத்தில் 500 சபைகளுக்கு ரூ. 3500 மதிப்பில் கிராமிய இசைக்கருவிகள் மற்றும் ரூ. 6500 மதிப்பில் பேட்டரி உள்ளடங்கிய Stranger உங்கள் குடும்பத்தின் சார்பில், சபை சார்பில், ஊழியத்தின் சார்பில் ஒன்று அல்லது அதற்கு அதிகமாக ஜெபித்து, வாங்கி வழங்க முன் வாருங்கள். இரண்டும் சேர்த்து ரூ. 10,000 கொடுத்து ஒரு சபைக்கு வழங்கலாம். நீங்கள் கொடுக்கும் காணிக்கை மூலமாக எந்த சபைக்கு, எந்த ஊழியரிடம் இந்த

உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு தெரிவிக்கும்படியாக வீடியோ DVD, போட்டோக்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். **இதுவரை தேவ கிருபையினால் 30 சபை போதகர்களுக்கு ஒலி பெருக்கி மற்றும் இசைக்கருவிகளும் வழங்கும்படியாக 30 ஆதரவாளர்களைத் தேவன் தந்துள்ளார்.** கொடுத்த அனைவரையும் தேவன் அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக!

குறிப்பாக பீல் சுதேச ஊழியரைத் தாங்கும் குடும்பத்தார், சபையார், குழுவினர்கள் மற்றும் ஆலயம் கட்டி கொடுத்தவர்கள் உதவி செய்ய முன்வாருங்கள். குறிப்பாக நிதி உதவியை இசைக்கருவிகளுக்கு **ரூ. 3500/–ம் ஒலி பெருக்கி சாதனத்திற்கு ரூ. 6500/–ம்** அல்லது இரண்டும் சேர்த்து **ரூ. 10,000 "ஷாலோம் கிராம ஆலய ஆராதனைக்காக"** என குறிப்பிட்டு அனுப்பவும். உபகரணங்களை நாங்கள் இங்கு குஜராத்தில் தாகோத்தில் கியாரண்டியுடன் சர்வீஸ் வசதியுடன் வாங்கி கொடுத்து விடுகிறோம். தேவன் தாமே உங்களை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக!

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | 106100710400009 (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | 105010100094373 (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | 613901112799 (IFS Code : ICIC0006139) |


# ஷாலோம் மிஷனெரி குடும்பக் கூடுகை

மிஷனெரி செய்தி :
பேராயர். **V. தேவதாஸ்**
ஷாலோம் ஊழியங்கள், குஜராத்

நாள்
**03.05.2015 ஞாயிறு**
நேரம்
**மாலை 6.00 மணி**
இடம்
**J.R. வலம்புரி மஹால்**
J.R. காம்ப்ளக்ஸ்
54, இரயில்வே ஃபீடர் ரோடு,
இராமநாதபுரம்.

- மகிமையான பாடல் மற்றும் ஆராதனை...
- முரட்டாட்டமாய் வாழ்ந்த ஜனங்களின் சாட்சிகள்...
- மிஷனெரி பிரதிஷ்டை வேளை....
- வீடியோ படக்காட்சிகள்...
- அனல் மூட்டும் தேவனுடைய வார்த்தை...



சபை பாகுபாடின்றி அனைவரும் பங்கு பெற்று
தேவாசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம்...

தொடர்புக்கு : **Prof. P. ஜார்ஜ், Cell : 98944-78405** (இராமநாதபுரம்)

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !**

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.




இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிகைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் **இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறோம்.**

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மே மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **“அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு ஜுன் - 2015 -லிருந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்”.**

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக

– பேராயர். வே. தேவதாஸ்

---

**‘‘... சுவிசேஷ விஷயத்தில் என்னோடுகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது’’. பிலி. 4:3.**

## குஜராத் பணித்தள அலுவலகத்தில் தேவனுடைய ஊழியம் செய்ய ஊழியர்கள் தேவை

*தேவ கிருபையினால் கடந்த 23 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது. ஆகவே குஜராத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரிய நமக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.*

1. **Accounts Department –ல் பணிபுரிய**
2. **Media Department (Audio, Video - Shooting & Editing) –ல் பணிபுரிய**
3. **Communication Department –ல் பணிபுரிய. (Tamil & English Typing தெரிந்த)**
4. **Magazine Department –ல் பணிபுரிய. (Tamil & English Typing தெரிந்த)**

இந்தப் பணிகளைச் செய்ய ஊழியர்கள் (சகோதரர்கள், சகோதரிகள் & திருமணமான தம்பதிகளானாலும் குடும்பமாக) நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள். ஆகவே ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். மேலும் தூத்துக்குடி அலுவலக மேலாளர் **சகோ. சாம் குணசீலன்** அவர்களோடு தொடர்பு கொள்ளலாம். **செல் போன் : 9345675468**

**“அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்.” மத்தேயு 9:37**

## *ஷாலோம் உபவாச ஜெபங்கள்*

| நாள் & நேரம் | இடம் |
|---|---|
| **09.05.2015,** *சனிக்கிழமை*<br>நேரம் : *மாலை 5.00 மணிக்கு* | M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்**<br>தொடர்புக்கு:<br>**சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**<br>**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405**<br>**சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820** |
| **16.05.2015,** *சனிக்கிழமை*<br>நேரம் : *காலை 10.00 மணி முதல் 1 மணி வரை* | எபனேசர் பிளாசா, பரமா தெரு, WCC ஜங்சன்,<br>**நாகர்கோவில்.**<br>தொடர்புக்கு: **Cell : 9698844511** |
| **23.05.2015,** *சனிக்கிழமை*<br>நேரம் : *காலை 10.00 மணி முதல் 1 மணி வரை* | No. 102 - 2வது மெயின் ரோடு,<br>சத்யா நகர், பாடி, **சென்னை**<br>தொடர்புக்கு:<br>**சகோ. ஜாண் ஜெயசிங், Cell : 9698244577** |

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

# சகோதரி. பொன்சீலி சாமுவேல் (இடையன்விளை) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை அறிக்கை - ஏப்ரல் 5 & 6

**இன்றும் ஜீவிக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக!**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஏப்ரல் மாதம் 5&6–ம் தேதிகளில் நானும் எனது கணவர் **சகோ. சாமுவேல்** மற்றும் எங்களது மகன் **சகோ. ஜெயராஜ்** மற்றும் என் **சகோதரி. எபநேசர்** அவர்களும் ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிட்டோம். ஈஸ்டர் திருநாளன்று **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் குஜராத் மாநிலத்திலுள்ள தெல்சர் கிராம ஆலயத்திற்கு சென்றோம். அங்கு சபை விசுவாசிகள் உற்சாகமாக தேவனை பாடி ஆராதித்துக் கொண்டிருந்தனர். அங்கு நாங்கள் சபை விசுவாசிகளுக்கு வாழ்த்து செய்தியைப் பகிர்ந்து கொண்டோம். தொடர்ந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள உதய்புரா கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்படியாக கடந்து சென்றோம். உதய்புரா கிராம மூப்பர்களும் விசுவாசிகளும் எங்களை உற்சாகமாக வரவேற்றார்கள்.

பின்பு எங்கள் குடும்பத்தின் சார்பில் அளிக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்ட புதிய ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் எங்களுக்கு கிருபை செய்தார். அனைவரும் மகிழ்ச்சியோடு கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தில் பிரவேசித்து, உயிர்த்தெழுந்த இயேசுவை நடனமாடி மகிழ்ச்சியோடு துதித்தார்கள். பின்பு ஆராதனை வேளையில் ஆலயம் கர்த்தருடைய பிரசன்னத்தினால் நிறைந்திருந்ததை காண முடிந்தது. தொடர்ந்து கலாச்சார முறையின்படி பேராயரின் குடும்பத்தையும் எங்களையும் வரவேற்றார்கள். அதன் பின் அந்த சபைக்கென்று ஒலிப்பெருக்கி மற்றும் மைக் மற்றும் இசைக் கருவிகளை ஜெபித்து வழங்கினோம். தொடர்ந்து கர்த்தருடைய வார்த்தையை நான் பகிர்ந்து கொள்ள **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். கூடியிருந்த தேவ ஜனங்கள் வசனத்தின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். சபை விசுவாசிகளுக்கென்று வேதாகமங்களை ஜெபித்து வழங்கினோம். ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் குடும்பத்தின் பிள்ளைகள் மூலமாக ஷாலோம் பணித்ளத்தில் பீல் ஆதிவாசி ஜனங்கள் கர்த்தரை ஆராதிக்க ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க பெரிய வாஞ்சையை கட்டளையிட்டார். அதின்படி மத்தியப்பிரதேசத்தில் காலாகூட் என்னுமிடத்தில் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த ஆலயத்தையும் ஊழியர் குடும்பத்தையும் சந்தித்து ஜெபித்தோம். அதோடு முதல் நாள் பணித்தளப் பார்வை நிறைவுற்றது. மறுநாள் திங்கட்கிழமையன்று இராஜஸ்தானிலுள்ள புதிதாக கட்டப்பட்டுள்ள பொட்டேலியா கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் கடந்து சென்றோம். விசுவாசிகள் உற்சாகமாக காத்திருந்தனர். நாங்கள் சென்றவுடன் தேவ நாம மகிமைக்காக புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் நாங்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தில்

விசுவாசிகள் சந்தோஷத்துடன் நடனாடி தேவனைத் துதித்தார்கள். பின்பு தங்கள் கலாச்சார முறையின்படி எங்களை வரவேற்றார்கள். தொடர்ந்து பொட்டேலியா சபைக்கென்று புதிய ஒலிப்பெருக்கி மற்றும் மைக் மற்றும் இசைக் கருவிகளை ஜெபித்து வழங்கினோம். மேலும் விசுவாசிகளுக்கென்று பரிசுத்த வேதாகமங்களையும் ஜெபித்து வழங்க தேவன் கிருபை செய்தார். பின்பு கர்த்தருடைய வார்த்தையை நான் பகிர்ந்து கொள்ள **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் கோய்க்கா பேராலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இராஜஸ்தான் ஊழியக்காரிகள் கூடுகையில் பங்கு பெற்றோம். அங்கு **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஆராதனை நடத்தினார்கள். பின்பு தேவ செய்தியை நான் பகிர்ந்து கொள்ள **சகோ. கேரட்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அனைவரும் வசனத்தின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

வா என்று அழைத்தவர் வல்லமையாய் நடத்துகிறார். அழைத்தவர் உண்மையுள்ளவர். **பிஷப் தேவதாஸ்** அவர்களையும், துணைவியார் **வஹிதா தேவதாஸ்** அவர்களையும் அழைத்து இந்த பீல் ஆதிவாசி மக்களை இயேசுவுக்கு சொந்த பிள்ளைகளாக மாற்றும்படியாக பெரிய தரிசனத்தோடு இந்த ஊழியத்தை நிறைவேற்றி நடத்தி வருகிறார். நம் பகுதியிலிருந்து இந்த வடமாநிலத்துக்கு கொண்டு வந்து எந்த போக்குவரத்து வசதி இல்லாத குன்றுகளும், பள்ளத்தாக்குகளுமாக இருக்கும் பகுதியில் உண்மையாக அயராமல் ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சாட்சியை நான் கேட்டபோது திருமணமான 40வது நாளில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியத்தை செய்ய அனுப்பினார் என்று கூறினார்கள். ஆரம்ப நாட்களில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்து ஊழியங்களை உருவாக்கி இன்று பீல் மக்கள் ஒவ்வொருவரும் **“ஜெய் ஈஜு”** என்று கரத்தை குலுக்கும்படி வைத்திருக்கிறார். இன்னும் பலகோடி மக்கள் இயேசுவண்டை வர வல்லமையாய் நடத்துவார்.

அவர்களில் எழுப்பி இருக்கிற மிஷனெரிமார்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். அவர்களையும் கர்த்தர் ஆத்துமபாரத்தோடு பயன்படுத்துகிறார். பரிசுத்தாவியினால் நிறைந்து தேவனை ஆராதித்து வல்லமையாய் ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் மூலமாக கர்த்தர் பெரிய அற்புதங்களை செய்கிறார்.

ஷாலோம் ஊழியத்தின் மூலமாக மிஷனெரிமார்கள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தோடு வல்லமையாய் ஊழியம் செய்கிறார்கள். சபைகளை நடத்துகிறார்கள். **பிஷப் தேவதாஸ்** அவர்களும், துணைவியார் **வஹிதா தேவதாஸ்** அவர்களும் உண்மையாக அயராது தேவராஜ்ஜியம் கட்டப்பட உழைப்பதை பார்த்து இன்னும் அவர்கள் மூலமாக பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஆலயங்கள் கட்டப்பட ஜெபித்து வருகிறேன்.

**இதை வாசிக்கிற தேவபிள்ளைகளே தேவன் யார் என்று தெரியாத பீல் மக்கள் கர்த்தரை ஆராதிக்க ஆலயங்களை கட்டிக் கொடுக்கலாம். உதவிகளை செய்யலாம். நாம் இந்த தேவராஜ்ஜியம் கட்டப்பட உதவினால் கர்த்தர் நம் குடும்பங்களை ஆசீர்வதிப்பார்.**

# சகோதரி. பொன்சீலி சாமுவேல் அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை

## (இம்மானுவேல் ஜெப வீடு, இடையன்விளை) - 05 & 06.04.2015


கலாச்சார வரவேற்பு


உதய்பூரா (ம.பி.) கிராம ஆலயத்தில் கூடியிருந்த தேவ ஜனங்கள்


தேவ செய்தி : சகோதரி. பொன்சீலி சாமுவேல் அவர்கள்


இராஜஸ்தான், கோய்க்கா ஆலயத்தில் நடைபெற்ற பெண்கள் கூடுகை


உதய்பூரா கிராம ஆலயத்திற்கு வழங்கப்பட்ட இசை உபகரணங்களுக்கான ஜெபம் & விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட வேதாகமங்களுக்கான சிறப்பு ஜெபம்


பொட்டேலியா கிராம ஆலயத்திற்கு வழங்கப்பட்ட இசை உபகரணங்களுக்கான ஜெபம்


பொட்டேலியா (இராஜ்) கிராம சபை விசுவாசிகள்


விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட வேதாகமங்களுக்கான சிறப்பு ஜெபம்

ஷாலோம் கிராம ஆலயம்

# போர்பானி குஜராத்



போர்பானி என்ற கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் மாவட்டத்தில் ஜாலோத் தாலுகாவில் அமைந்துள்ளது. சகோ. கமலேஷ் சங்காடா சாராயம் மற்றும் போதை வஸ்துக்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவரது சகோதரர் 10 வருடங்களாக பில்லிசூனியக் கட்டினிமித்தம் வியாதியினால் கஷ்டப்பட்டு வந்தார். இந்நிலையில் ஷாலோம் போதகர். அனில் கணாவா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி இவரது சகோதரருக்காக ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் கமலேஷ் சங்காடா அவர்களின் குடும்பமும் இரட்சிக்கப்பட்டது. பின்பு தேவன் ஊழியம் செய்யும்படியான பாரத்தினைக் கொடுக்க, தங்களது சொந்த கிராமமாகிய போர்பானியில் கமலேஷ்–ன் வீட்டில் 7 பேருடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 25 குடும்பத்தார் ஞாயிறு தோறும் தேவனை ஆராதித்து வருகிறார்கள். சகோ. கமலேஷ் சங்காடா ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறார்.

கமலேஷ் சங்காடா அவர்கள் நிலத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டு, தேவ நாம மகிமைக்காக 28–03–2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் முன்னிலையில் சகோதரி. ரேவதி போன்ஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த கிராம ஆலயம் MCC Matriculation Hr. Sec. School ஆசிரியர்கள் கொடுத்த நிதிஉதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

ஷாலோம் கிராம ஆலயம்

# தெல்வானி மத்தியப்பிரதேசம்



தெல்வானி என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள அலிராஜ்பூர் மாநிலத்திலுள்ள அலிராஜ்பூர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சகோ. நான்சிங் சௌகான் அவர்கள் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்தவர். இவர் உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்ந்து, போதைப் பழக்கத்திற்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவரது மனைவி 8 வருடங்களாக டி.பி. வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இந்நிலையில் ஜாகிர் சோலன்கி என்ற சகோதரர் இயேசுவைப் பற்றி கூறி, கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு இவரது மனைவிக்கு தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டார். பின்பு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, தனது சொந்த கிராமமாகிய தெல்வானியில் 1 குடும்பத்துடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். தற்போது 60 குடும்பத்தார் தேவனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஊழியர். நான்சிங் சௌஹான் அவர்களின் நிலத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டு, தேவ நாம மகிமைக்காக 07–04–2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த கிராம ஆலயம் இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி ஊழியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

ஷாலோம் கிராம ஆலயம்

# பொட்டேலியா இராஜஸ்தான்



பொட்டேலியா என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த சகோ. மடியா கடியா என்பவர் 3 வருடங்களாக நெஞ்சு வலியினால் கஷ்டப்பட்டு வந்தார். இந்நிலையில் இவரது மனைவியின் சகோதரியான துலிபேன் மூலம் ஷாலோம் ஊழியர் பாதர் பாரியா அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டார். ஊழியர் இவருக்காக ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக்கொண்டார்கள். அதன்பின் தேவன் இவருக்கு தரிசனம் தந்து ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பை ஏற்று தனது சொந்த கிராமமாகிய பொட்டேலியாவில் 3 குடும்பங்களுடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். தற்போது 32 குடும்பங்கள் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள்.

ஊழியர். மடியா கடியா அவர்களின் நிலத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டு, 06–04–2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் முன்னிலையில் சகோதரி. பொன்சீலி சாமுவேல் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த கிராம ஆலயம் அயர்லாந்தைச் சேர்ந்த சகோ. சுரேஷ் கிறிஸ்டியன் எல்லிஸ் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

ஷாலோம் கிராம ஆலயம்

# உதய்புரா மத்தியப்பிரதேசம்



உதய்புரா என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் மேக்நகர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சகோ. கல்சிங் புரியா அவர்கள் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவருக்கு திருமணமாகி குழந்தை இல்லாமல் இருந்தது. மேலும் இவருடைய மனைவிக்கு 1 வருடமாக வயிற்றில் எரிச்சல் காணப்பட்டது. இந்த சூழ்நிலையில் ஷாலோம் ஊழியர் போதகர். கோர்சிங் மெய்டா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி இவருடைய மனைவிக்காக ஜெபித்தார். உடனே தேவன் வயிற்றிலிருந்த எரிச்சலை மாற்றி, குழந்தை பாக்கியத்தை ஆசீர்வதித்தார். இந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பின்பு தேவன் ஊழியம் செய்ய பாரத்தினைக் கொடுக்கவே, தனது சொந்த கிராமமாகிய உதய்புராவிலுள்ள தனது வீட்டில் 5 குடும்பங்களுடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். தற்போது 85 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள். போதகர். கல்சிங் புரியா அவர்களின் நிலத்தில், பெரிய புதிய ஆலயம் கட்டப்பட்டு, தேவ நாமம் மகிமைப்படும்படியாக 05–04–2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் முன்னிலையில் சகோதரி. பொன்சீலி சாமுவேல் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த கிராம ஆலயம் இடையன்விளையைச் சேர்ந்த சகோதரி. பொன்சீலி சாமுவேல் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

# சென்னை, MCC Matriculation Hr. Sec. School முதல்வர் சகோதரி. ரேவதி போன்ஸ், சகோதரி. கிறிஸ்டினா (ஆசிரியை) ஆகியோரின் பணித்தள வருகை – 28 & 29.03.2015


கலாச்சார வரவேற்பு


கிராம ஆலயத்திற்கு வழங்கப்பட்ட இசை உபகரணங்கள் & ஒலிபெருக்கியுடன்


தேவ செய்தி : சகோதரி. ரேவதி போன்ஸ் அவர்கள்


போர்பானி (குஜராத்) கிராமத்தில் – பாடல் & ஆராதனை வேளை


போர்பானி கிராம சபை விசுவாசிகள்


தோரண்யா வட்டார ஊழியர்கள் குடும்பங்களுடன்


கங்கேலா (குஜராத்) கிராம சபையில் செய்திவேளை


கங்கேலா கிராம சபையில் கூடியிருந்த விசுவாசிகள்


ஞாயிறு பள்ளி சிறுவர்களுடன் – தோரண்யா கிராம ஆலயம், ம.பி,

## பணித்தள பார்வை அறிக்கை

வறட்சியான வேலை பளுவினிடையே குஜராத் பயணம் ஒரு இனிமையான மாறுதலாய் இருந்தது. எனக்கும், எனது சக பள்ளி ஆசிரியை **திருமதி கிறிஸ்டினா பிரின்ஸ்–ற்கும்** நிறைய எதிர்பார்ப்புகள், அதே சமயம் சில கேள்விகளும், சந்தேகங்களும் எங்கள் மனங்களை ஆட்கொண்டிருந்தன. ஷாலோம் ஊழியங்கள் பற்றி நிறைய கேள்விபட்டிருந்தோம். **திருமதி கிறிஸ்டினாவின்** முயற்சியால் ஒரு ஆலயம் கட்டுவதற்குரிய அளவு பணமும் (இரண்டு இலட்சம்) சேகரித்திருந்தோம். அந்த ஆலய பிரதிஷ்டைக்காகவே நாங்கள் தாகோத் சென்றோம்.

பணித்தளப்பார்வையின் முதல் நாளன்று நாங்கள் தாகோத் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று வரும் புதிய சுதேச ஊழியர்களை சந்தித்தோம். அதைத் தொடர்ந்து ஷாலோம் பணித்தள அலுவலகம் மற்றும் ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனையையும் அங்கு பணிபுரியும் மருத்துவரையும் ஊழியர்களையும் பார்வையிட்டோம்.

அதைத் தொடர்ந்து **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் குஜராத் மாநிலத்திலுள்ள தெல்சர் கிராம ஆலயத்தைப் பார்வையிட்டு, ஊழியர் குடும்பத்தையும் சந்தித்தோம். பின்பு மத்தியப்பிரதேசத்திலுள்ள தோரண்யா கிராம சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேஷக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். தங்கள் கலாச்சார முறையின்படி எங்களை வரவேற்றார்கள். அந்த கூட்டத்தில் நாங்கள் இருவரும் வாழ்த்து செய்தியை பகிர்ந்து கொண்டோம். பின்பு அந்த சபைக்கென்று புதிய ஸ்பீக்கர் மற்றும் மைக் மற்றும் இசைக் கருவிகளை ஜெபித்து வழங்கினோம். தொடர்ந்து **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். கூட்டம் ஆசீர்வாதமாக இருந்தது. கூட்டம் முடிந்தவுடன் அந்த சபையின் ஞாயிறு பள்ளி சிறுவர்களை பார்வையிட்டோம்.

வரும் வழியில் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஷாலோம் ஹரிநகர் விடுதியையும் அங்கு தங்கி படிக்கும் மாணவ மாணவிகளையும் பார்வையிட்டோம்.அதைத் தொடர்ந்து குஜராத்திலுள்ள ஜாலோத் தாலுகாவிலுள்ள போர்பானி கிராமத்தில் மெட்ராஸ் கிறிஸ்தவ கல்லூரி பள்ளியின் மூலம் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்ட புதிய ஆலயத்தின் பிரதிஷ்டை ஆராதனையில் பங்கு பெற்று, அந்த ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் தேவ நாம மகிமைக்காக ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். ஆலயம் முழுவதும் மக்கள் நிறைந்திருந்தார்கள். அந்த சபைக்கென்றும் புதிய ஸ்பீக்கர் மற்றும் மைக் மற்றும் இசைக் கருவிகளை ஜெபித்து வழங்கினோம். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள்.

மறுநாள் குறுத்தோலை ஞாயிற்றுக் கிழமையன்று **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் குஜராத்திலுள்ள வரம்கேடா–1, வரம்கேடா–2 கிராம ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு

வாழ்த்து செய்தி கூறினோம். மேலும் கர்பாடா தாலுகாவிலுள்ள பாட்டன்புரா சபையின் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டோம். விசுவாசிகளுடன் சேர்ந்து நடனமாடி துதிக்க தேவன் கிருபை செய்தார். தொடர்ந்து நாங்கள் வாழ்த்து செய்தி கூறி, பின்பு அங்கிருந்து கங்கேலா கிராம ஆலய ஆராதனையில் கலந்து கொண்டோம். கங்கேலாவில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஆராதனை நடத்தி தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். நாங்கள் வாழ்த்து செய்தி கூற, அதைத் தொடர்ந்து ஆலய ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. நாங்கள் பார்வையிட்ட சபைகளிலெல்லாம் மக்கள் நிரம்பியிருந்தார்கள்.

**பிஷப் தேவதாஸ்** அவர்களும், அவரது துணைவியார் **திருமதி வஹிதா தேவதாஸ்** இருவரும் எங்களுக்கு இனிய வரவேற்பை அளித்து எங்களுடைய உணவு, உறைவிடம் போன்றவற்றை பார்த்துக் கொண்டனர். சகோதரர் எங்களை அந்த மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். பீல் ஆதிவாசி மக்களின் கிராமங்களும். கலாச்சாரங்களும் அவர்களது வீடுகளும் எங்களுக்கு முற்றிலும் புதிய அனுபவத்தை கொடுத்தது. வறுமை, வசதியின்மை அவற்றினூடே அத்தனை மகிழ்ச்சியும் இறைவனைக் குறித்த வைராக்கியமும் காணப்படக்கூடுமா? என்று மலைத்தோம். அவர்களது ஆராதனை முறைமையும், ஆண்டவர் மீது அவர்கள் கொண்டிருக்கும் பற்றும் சொல்ல முடியாதது. பீல் ஆதிவாசி மக்களை ஆண்டவர் ஏன் தெரிந்துக் கொண்டார்? என்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடிந்தது.

எங்கு திரும்பினாலும் **ஜெய் ஈஷு** என்ற வாழ்த்து எங்கள் இதயங்களை பூரிக்கச் செய்தது. அவர்களுடைய ஆலய ஆராதனை வேளை எங்கள் கண்களில் கண்ணீரை வரவழைப்பதாய் இருந்தது. கொள்ளைக்காரர்களாய், சாராயம் காய்ச்சுபவர்களாய் இருந்த அந்த பீல் ஆதிவாசி மக்களின் வாழ்க்கைமுறை முற்றிலும் மாறி இருப்பது சர்வ வல்ல தேவனின் கிருபை என்பதை உணர்ந்து நாங்கள் தேவனை துதித்துக் கொண்டு சென்னை திரும்பி வந்தோம்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் – நாம் எதிர்நோக்கும் சவால்.

பீல் ஜாதி மக்களின் வாழ்க்கை முறையும் அந்த சுதேச ஊழியர்களின் தேவையும் மூன்றே நாட்களில் ஒரு பெரிய மாற்றத்தை எங்கள் உள்ளத்தில் கொண்டு வந்தது. அவர்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? என்ற கேள்வி எங்கும் எதிரொலிக்கிறது. எத்தனை ஆசீர்வாதங்களை ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம்? எதைத் திருப்பிக் கொடுக்கப் போகிறோம் ஆண்டவருக்காய்? நாம் இப்போது செய்ய வேண்டியது என்ன? இத்தனை கேள்விகளையும் இதை வாசிக்கும் உங்கள் யாவர் முன்னும் வைக்கின்றேன். கர்த்தருக்குள் பிரியமானவர்களே, **இந்த கிருபையின் காலத்தின் கடைசி மணித்துளிகளில் இருக்கின்றோம். ஆத்தும ஆதாயமே பரலோகத்தில் நுழைய அனுமதிச்சீட்டு. அதைப் பெற்றுக் கொள்ள முந்திக் கொள்வோமா?**

**சகோதரி. ரேவதி போன்ஸ்,**
MCC Matriculation Hr. Sec. School Principal & Correspondent
**சகோதரி. கிறிஸ்டினா** (ஆசிரியை)
Chennai

# சிறுவர் வேதாகம வகுப்பு–2015 CBC (VBS)

பிரியமானவர்களே, நமது ஷாலோம் கிராம சபைகளிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருவதால், அவர்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்தச் சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு தோறும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதப் பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2014 ஆம் ஆண்டில் "ஜெபமே ஜெயம்" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட CBC வகுப்புகளில் 30,000க்கும் அதிகமான சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் "நிலைத்திரு" என்ற தலைப்பில் 600 கிராமங்களில் 40,000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு CBC நடத்த ஜெபத்துடன் ஆயத்தப்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கானப் பயிற்சிக் கையேடுகள், 40,000 CBC புத்தகங்கள், Badge. (40,000), பாட்டுப் புத்தகங்கள் (15,000), கலர் பென்சில்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் கொடுக்கவும் ஒரு குழந்தைக்கு தலா **ரூ. 20/– வீதம் 40,000 மாணவர்களுக்கு ரூ. 8 இலட்சங்கள் தேவைப்படுகிறது.** இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**மேலும் உங்கள் குடும்பத்தின் மற்றும் ஊழியத்தின் சார்பில் அல்லது சபையின் சார்பிலோ ஒரு மாணவருக்கு ரூ. 20/– வீதம் உங்களால் முடிந்த அளவிலான காணிக்கையை மாணவர்களுக்குக் கொடுத்து இந்தச் சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.**

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!



கடந்த ஆண்டின் CBC பயிற்சிப் புத்தகங்கள்

...மிகவும் சிறியவராகிய
என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு
நீங்கள் எதைச் செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள்....
– (இயேசு) மத்தேயு 25:40

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**இந்திய தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக**

இந்திய தேசத்தை தேவன் ஆசீர்வதிக்கும்படியாகவும், தேசத்தில் பல இடங்களில் நடக்கும் வன்முறைகள் எல்லாம் மாறும்படியாகவும், குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கும், ஊழியங்களுக்கும் விரோதமாக எழும்பும் நிலைமை மாறி கர்த்தருடைய நாமம் மகிமைப்படும் படியாகவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும்**

தேசத்தில் உள்ள அனைத்து மிஷனரி ஊழியங்களுக்காகவும், சுவிசேஷ ஊழியங்களுக்காகவும், சபை ஊழியங்களுக்காகவும், போதகர் ஊழியங்களுக்காகவும், தீர்க்கதரிசன ஊழியங்களுக்காகவும் இந்த ஊழியங்களையும், ஊழியர்களையும் தேவன் பாதுகாத்து தம்முடைய நாம மகிமைக்காக வல்லமையாகப் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**விஷ காய்ச்சல்**

நம் தேசத்தில் காணப்படுகின்ற விஷ காய்ச்சல் மற்றும் பலவிதமான நோய்கள் எல்லாம் மாறவும் மக்கள் நல்ல சுகத்தோடு தேவனை மகிமைப்படுத்தும் படியாகவும் ஜெபியுங்கள்.

**வடஇந்தியாவின் பாதுகாவலுக்காக**

வடஇந்தியாவில் உள்ள ஊழிபங்களுக்காகவும், அங்குள்ள ஊழியர்களுக்காகவும் குறிப்பாக நம் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் எழும்பியுள்ள எதிர்ப்பாளர்களுக்காகவும், எந்த எதிர்ப்பு வந்தாலும் விசுவாசிகள் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் முன்னேறவும், அதன் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாகவும் ஜெபியுங்கள்.

**சாலை விபத்துக்கள்**

தற்போது அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுகிறது நம்முடைய ஊழியர்கள், விசுவாசிகள், சிறு குழந்தைகள், வாலிபர்கள் அனைவருக்கும் தேவன் தாமே முன்னின்று சாலை விபத்துக்களிலிருந்து நம்மை பாதுகாக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக**

கர்த்தர் தரிசனமாகக் கொடுத்த குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இயேசுவை அறிந்துக் கொண்டு அவரை ஏற்றுக் கொண்டு அங்குள்ள மந்திரவாதிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், பலவிதமான பாவ, சாபங்களிலும் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் திருச்சபை ஒருங்கிணைப்பு**

வளர்ந்து வரும் ஷாலோம் ஊழியத்தில் 3 மாநிலங்களிலும் உள்ள சபைகள், விசுவாசிகள், ஊழியர்கள் பெருகியுள்ளார்கள் மூன்று மாநிலங்களும் மூன்று திருமண்டலமாக பிரிக்கப்பட்டு இதில் ஊழியம் செய்கிற குருவானவர்கள் அனைவருக்கும் ஒரு மனமாய் செயல்பட கர்த்தருக்கென்று உண்மையோடு செயல்பட ஜெபியுங்கள்.

**CBC சிறுவர் வேதாகமப் பள்ளி (VBS)**

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் தேவனுடைய பெரிதான கிருபையால் பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் CBC சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதேபோல் இந்த ஆண்டும், CBC நடத்த ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதில் பங்கு பெறவிருக்கும் 40000க்கும் அதிகமான சிறுவர்களுக்காகவும், 600க்கும் அதிகமான CBC மையங்களுக்காகவும் இதன் தேவைகளான **ரூ. 8 லட்சங்கள்** கிடைக்கப் பெறவும் தவறாமல் ஜெபியுங்கள்.

**புதிய சுதேச ஊழியர்களுக்காக**

தேவனுடைய பெரிதான கிருபையினால் 45 புதிய சுதேச ஊழியர்கள் நமது ஷாலோம் ஊழியத்தில் இணைந்து சிறப்பு வேதாகம பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களுக்காகவும், இவர்கள் குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள். மேலும் தேவன் இவர்களை ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தவும், அநேக ஆயிரம் ஆத்துமாக்களை இரட்சிக்கும்படியாக தேவன் இவர்களை கருவிகளாக பயன்படுத்தவும் ஜெபியுங்கள். மேலும் இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக 200 புதிய ஊழியர்களைத் தரவும் ஜெபியுங்கள்

**தேர்வெழுதி முடிவுகளுக்காக காத்திருக்கும் மாணவ மாணவிகளுக்காக**

நம் ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்பட்டு வரும் சிறுவர்கள் மற்றும் நம் சுதேச ஊழியர்களுடைய பிள்ளைகள் மற்றும் ஆதரவாளர்களின் பிள்ளைகள் 10ம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகள் எழுதியுள்ளனர். இந்தப் பிள்ளைகளுக்கு தேவன் நல்ல மதிப்பெண்களைக் கொடுக்கவும், மேற்படிப்புகளுக்கு நல்ல வழி வாசல்களைத் திறந்து கொடுக்கவும், தாங்கள் விரும்பும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் இடம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**ஆலய கட்டுமான பணி**

பணித்தளங்களில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட பீல் மக்கள் ஆராதிப்பதற்கு அநேக கிராமங்களில் ஆலயம் இல்லாமல் இருக்கிறார்கள். 2015ம் ஆண்டில் நம்முடைய பணித்தளத்தில் 100 ஆலயங்கள் கட்டப்பட வேண்டியுள்ளது. ஒரு ஆலய கட்டுமானப் பணிக்கு குறைந்தது ரூ. 2 இலட்சங்கள் தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்படவும், எதிர்ப்புகள் இல்லாமல் குறித்த நேரத்தில் ஆலயங்கள் கட்டி முடிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் பங்காளர்கள்**

மாதந்தோறும் புதிய ஆதரவாளர்கள் இணையவும், ஆதரவாளர்களுடைய குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய நோய்கள், கடன் பிரச்சனைகள், பிசாசின் கட்டுகள், மரணப்படுக்கைகள் மாறவும், குழந்தை இல்லாத குடும்பங்களில் தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுக்கவும், வேலை இல்லாத பிள்ளைகளுக்கு தேவன் தக்க சமயத்தில் வேலையைக் கொடுத்து ஆசீர்வதிக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

# Rev. தாமஸ் கெஜற்றன் இராக்லாந்து



**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,**

நான் பிறந்து வளர்ந்த ஊராகிய சிவகாசி பகுதிக்கு இங்கிலாந்து தேசத்திலிருந்து சுமார் 170 ஆண்டுகளுக்கு முன்பாக சுவிசேஷம் அறிவிக்கும்படியாக ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்து வந்த **தாமஸ் கெஜற்றன் ராக்லண்ட்** ஐயரவர்களின் வாழ்க்கை, மிஷனெரி ஊழியத்திற்கென்று என்னையும் ஒப்புக்கொடுக்க ஒரு சவாலாக அமைந்தது. **ராக்லண்ட் மிஷனெரி** அவர்கள் இந்த மண்ணில் கோதுமை மணியாக விழுந்து, மிகுந்த பலனைக் கொடுத்துபோல, அவருடைய வாழ்க்கை அடியேனையும் ஒரு கோதுமை மணியாக உருவாக்கியது. பாரத தேசத்தில் சபை அஸ்திபார பணிக்காக தேவன் கொடுத்த **ராக்லண்ட்** போன்ற மிஷனெரிகளுக்காக **தேவனைத் துதிப்போம்.**

பேராயர் ***V. தேவதாஸ்***

---

**தாமஸ் கெஜற்றன் இராக்லாந்து,** தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தன் தந்தையை இழந்தவர். அந்த விதவை தாய்க்கு கைக்குழந்தையான இராக்லாந்தும் மற்றும் ஒரு மகளும், மகனும் இருந்தனர். துன்பமான அந்த நாட்களில், அந்த விதவை தாயின் அண்ணன் அக்குடும்பத்தை தன்னுடன் அழைத்துச் சென்றார். சிலகாலம் சென்ற பின் **இராக்லாந்தின்** தாயாரும் மரித்து விட்டார்.

சிறு வயதிலேயே **இராக்லாந்து,** தன் மாமாவின் வீட்டில் வளர்ந்தார். **இராக்லாந்தின்** மாமா **சார்லஸ் பர்ச்,** இராக்லாந்தை லிவர்பூலின் சிறு பகுதியான கார்த்மெல் (Cartmel) என்ற இடத்திலுள்ள சிறு பள்ளியில் சேர்த்தார். பின்பு மேல்நிலை படிப்பிற்காக ஷ்ராப்ஷையர் (Shrop-shire) என்ற மாகாணத்தில் உள்ள பள்ளியில் சேர்க்கப்பட்டார். படிக்கும் நாட்களில் வேதவாசிப்பு, ஜெபம், ஞாயிறு ஆராதனை, ஞாயிறு பள்ளி ஆகியவை இராக்லாந்தை விட்டு பிரிக்க முடியாதவைகளாய் இருந்தன. அதன் பலனாக புத்திக்கூர்மை, சுறுசுறுப்பு, கீழ்ப்படிதல் போன்ற நற்குணங்களுடன் உயர்ந்த மதிப்பெண்களில் அவர் தேர்ச்சி பெற்றார்.

பள்ளிப்படிப்பு முடிந்து 17 வயதில் லிவர்பூலில் இருந்த, தன் மாமாவின் பிரம்மாண்டமான ஹைபீல்டு & பிர்ச் (Highfield and Birch) என்ற வியாபார ஸ்தலத்தின் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார். அலுவலகத்திற்குள் நுழைந்த **சார்லஸ் பர்ச்,** தன் தங்கையின் மைந்தன் அலுவலக வேலையில் மூழ்கியிருந்ததைக் கண்டு, சந்தோஷமடைந்தார். பின்பு **இராக்லாந்தை** தன் அறைக்கு அழைத்து, தனக்கு வயதாகி வருவதால் “இந்த முழு நிறுவனத்தையும் நீ பொறுப்பெடுத்து நடத்துவாய் என்று நம்புகிறேன். உன் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்” என்றார். சிலநாள் **இராக்லாந்து** ஜெபித்து ஆண்டவரின் பாதத்தில் காத்திருந்து பின்னர் தன் மாமாவிடம் கல்லூரி படிப்பை படித்து முடிக்கும் ஆர்வத்தைத் தெரிவித்தார். அதை ஏற்றுக் கொண்ட அவர் மாமா இராக்லாந்தை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கல்லூரியில் சேர்த்தார்.

கல்லூரியில் கிரமமாக படித்து, முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் படிக்கும் நாட்களிலும் கிறிஸ்துவுக்கென்று வைராக்கியமாய் வாழ்ந்தார். B.A. ஆனர்ஸ் பட்டமும்

பின்னர் M.A. ஆனர்ஸ் பட்டமும் பெற்றார். முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றதால் வெள்ளிக் கோப்பைகளையும் பரிசாக பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அவரை Fellow ஆக தேர்ந்தெடுத்தனர். இவையெல்லாம் தகுதியில்லாத தனக்கு கர்த்தர் தந்த ஈவு என்று ஸ்தோத்திர ஜெபம் செய்தார். பின்னர் அப்பல்கலைக்கழக கல்லூரி ஒன்றில் டியூடர் (Tutor) ஆக பணி செய்து வந்தார். அதன்பின் குருத்துவத்திற்கான B.D. படிப்பையும் முடித்து 1842ல் New Town பகுதியில் குருவானவராக பணியமர்த்தப்பட்டார்.

அந்நாட்களில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்கள், C.M.S. மிஷனரி ஊழியத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். அடிக்கடி C.M.S. மிஷனரிகள் அப்பல்கலைக்கழகத்திற்கு வந்து மாணவர்களுடன் கலந்துரையாடுவதும், மாணவர்கள் காணிக்கை கொடுப்பதும் ஜெபத்தால் தாங்குவதும் நடந்து வந்தது. அக்காலங்களில் **இராக்லாந்திற்கு** மிஷனரியாக செல்வதில் விருப்பமில்லாமலிருந்தது. **இராக்லாந்து** "Cambridge Association of the CMS" ல் Treasurer ஆகவும் இருந்தார். 1844ல் ஒருமுறை C.M.S. மிஷனரியின் ஊழிய அழைப்பு செய்திக்குப் பின் **இராக்லாந்து** அவர் நண்பர் **ஆல்நட்** இருவரிடமும் ஆவியானவர் பேசினதால், தங்களை ஆண்டவரின் பணிக்கு ஒப்புவித்தனர். தாங்கள் இந்தியாவிற்கு மிஷனரியாக செல்லும் விருப்பத்தை C.M.S. சங்கத்தாரிடம் தெரிவித்தனர். C.M.S. சங்கம் **ஆல்நட்டை** பாளையங்கோட்டைக்கு மஷனரியாக அனுப்பியது. **இராக்லாந்து** சென்னைக்கு C.M.S. செயலாளராக (C.M.S. Secretary) அனுப்பப்பட்டார். இராக்லாந்துக்கு C.M.S. சங்கத்தினரால் உருவாக்கப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், சபைகள், ஊழியர்கள் ஆகியவற்றை நிர்வகிக்கும் முழு பொறுப்பும் கொடுக்கப்பட்டது. 1846 ஜனவரி முதல் வாரத்தில் **இராக்லாந்து** சென்னை வந்தடைந்தார்.

ஜூலை **21**ம் தேதி திருநெல்வேலிக்கு புறப்பட்டார். ஆகஸ்ட் **14**ல் பாளையங்கோட்டை வந்து சேர்ந்து, நல்லூர், ஆலங்குளம், சுரண்டை, ஆசீர்வாதபுரம், சாத்தான்குளம், மெஞ்ஞானபுரம் மற்றும் பல சபைகளையும் சந்தித்தார். நம் பகுதிக்கு வந்ததையும் இங்கு நடந்த சுவாரசியமான நிகழ்ச்சிகளையும் அவர் நாட்குறிப்பில் பதிவு செய்தார். தென்திருநெல்வேலி பகுதியைவிட வடதிருநெல்வேலி பகுதியைக் கண்டு பரிதாபம் கொண்டார். அங்கு சரிவர மிஷனரிகள் இல்லை என்பதை அறிந்து C.M.S. சங்கத்திற்கு ஒரு பெரிய அறிக்கையை தயார் செய்தார். அந்த அறிக்கையில், வடதிருநெல்வேலி பகுதியான ஏழாயிரம் பண்ணை, கோவில் பட்டி, நாகலாபுரம், விருதுநகர், சிவகாசிக்கு ஊழியர்களை அனுப்ப வேண்டும் என்றும், அவர்கள் எப்படி பணியமர்த்தப்பட வேண்டும் என்பதும் இருந்தது. அந்த அறிக்கையை எழுதி முடிக்கும் முன் **"வடதிருநெல்வேலிக்கு நீ போக வேண்டியது தானே, நீ போய் இருந்து கொண்டு மற்றவர்களை வாருங்கள் என்று கூப்பிடுவதை விட்டுவிட்டு அனுப்புங்கள் என்று சொல்கிறாயே"** என்ற ஆவியானவரின் சத்தத்தைக் கேட்டார்.

உடனே அந்த சத்தத்திற்கு கீழ்ப்படிந்தவராய், வடதிருநெல்வேலிக்கு மிஷனரியாக போகவும் C.M.S. Secretary பதவியை ராஜினாமா செய்யவும் முடிவு செய்தார். C.M.S. Secretary பதவி என்பது தமிழ்நாடு, தெலுங்கு நாடு, திருவாங்கூர் ஆகிய மூன்று பிரதேசங்களிலும் பணிசெய்து வந்த ஒவ்வொரு மிஷனரியையும் அவர்கள் சபைகளையும் கவனித்து வழிநடத்தி செல்லக்கூடிய பொறுப்பான பதவியாகும். அந்த பொறுப்பை உணர்ந்து இராக்லாந்து, ஒவ்வொரு மிஷனரியையும் கனிவுடனும், கரிசனையுடனும் கவனித்து வந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் Fellow ஆக தேர்ந்தெடுத்ததால், உதவித்தொகையை (Scholarship) மாதா மாதம் அனுப்பியது. அதை

தேவையுள்ளோருக்கு கொடுத்து உதவினார். தான் பணிபுரியும் CMS சங்கத்திற்கு 550 பவுன் தங்கத்தைக் காணிக்கையாக கொடுத்து, தன்னுடைய பெயர் வெளியே தெரியாவண்ணம் பார்த்துக் கொண்டார். தன்னுடைய பதவியை ராஜினாமா செய்ய மேலிடத்தில் பேசினார். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. லண்டன் மாநகரிலுள்ள தாய் சபைக்குத் தெரிவித்தார், அவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. பல கஷ்டங்கள்பட்டு தன் பதவியை ஒருவழியாக இராஜினாமா செய்தார். உடல் சுகவீனம், Fellow ஆக இருப்பதால் B.D., பட்டத்தை நேரில் சென்று வாங்க வேண்டிய கட்டாயம் மேலும் தனக்கு பிரியமானவர்களை ஒருமுறை நேரில் காண வாஞ்சை போன்ற காரணங்களால், இங்கிலாந்திற்கு 1852 பெப்ரவரி 24ல் **“சீக்கிரம் வருவேன்”** என்ற நம்பிக்கையுடன் பயணமானார். இங்கிலாந்து சென்றாலும் வடதிருநெல்வேலி திட்டம் அவர் மனதை வருத்தியபடியே இருந்தது.

இங்கிலாந்தில் இராக்லாந்தை வரவேற்ற உறவினர்கள், இராக்லாந்தின் மெலிந்து போன களையிழந்த உடல் நிலையை பார்த்துக் கண்கலங்கி, மருத்துவரிடம் அழைத்து சென்றனர். சீக்கரம் இந்தியா செல்ல வேண்டுமே என்ற நோக்கத்தில், மருத்துவர் சொல்படியெல்லாம் கேட்டு நடந்தார். B.D., பட்டத்தையும் நேரில் வாங்கினார். உடல்நிலை தேறியவாறு இல்லை. மிகவும் மோசமாகிவிட்டது. மருத்துவர்கள், உறவினர்கள் மற்றும் C.M.S. சங்கத்தாரால் இந்தியா செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டார். சங்கத்தார் அவர் உடல்நிலைவயைப் பார்த்து பரிதபித்துவிட்டு நீங்கள் இந்தியாவிற்கு செல்லவே வேண்டாம் என்று கூறினர். இராக்லாந்து C.M.S. சங்கத்தாரிடம் நீங்கள் என்னை அனுப்பாவிட்டால், வடதிருநெல்வேலி திட்டம் பாழாய்ப்போய்விடும்.

எனக்கு சம்பளமோ கப்பல் பிரயாண செலவோ வேண்டாம், என்னை வடதிருநெல்வேலிக்கு மட்டும் அனுப்பிவிடுங்கள் என்று கெஞ்சினார். **இராக்லாந்தின்** உடல்நிலை நிமித்தம் அவரை அனுப்புவது சிந்தித்துப்பார்க்க கூடாத காரியமாக இருந்தது. அதனால் அவருடன் 2 கேம்பிரிட்ஜ் பட்டதாரிகளையும் சேர்த்து அனுப்ப தீர்மானித்தனர். ஒருவர் **Rev. டேவிட் ஃபென்** (David Fenn, M.A.,) மற்றொருவர் **Rev. ராபர்ட் ரஸ்ட் மெடோஸ்** (Robert Rust Meadows, B.A.).

கேம்பிரிட்ஜ் கல்லூரி மாணவர்கள் தங்கள் மிஷனெரி கூடுகையில் இராக்லாந்தை பேச அழைத்தனர். இராக்லாந்து எவ்வளவு மறுத்தும் அவர்கள் விடவில்லை. கூடுகையில் அவர் பேசும் முறை வந்தது. அவரால் எழும்ப முடியவில்லை. கஷ்டப்பட்டு எழும்பி வந்தார். **“எனக்கு பேச முடியவில்லை, சகோதரரே எங்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்”** என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விட்டார். எல்லோரும் ஜெபித்தார்கள். இந்தியா திரும்பும் முன் இதுதான் அவர் நிலை. இயலாத உடல்நிலையிலும் இந்தியாவுக்கு 14.09.1853ல் கப்பல் ஏறினார். மூன்று மாதங்களுக்கு மேல் கப்பல் பிரயாணம் செய்து 31.12.1853ல் சென்னையில் வட திருநெல்வேலி மிஷனெரியாக காலடி பதித்தார். வடதிருநெல்வேலி பயணத்திற்கு மாட்டுவண்டி, தட்டுமுட்டு சாமான்கள், புத்தகங்கள் மடக்கு கட்டில்கள் பெட்டிகள், கூடாரங்கள் சிறு மேசைகள் புதிய ஏற்பாட்டு பிரதிகள் எல்லாவற்றிற்கும் மேலாக வேதவாசிப்பு மற்றும் ஜெபத்துடன் ஆயத்தமானார்.

**18.01.1854ல் இராக்லாந்து, ஃபென், மெடோஸ், யோசேப்பு கொர்நேலியு** என்ற உபதேசியார் மற்றும் சில வேலையாட்களுடன் பிரயாணத்தைத் தொடங்கினார். தினமும் 12 மைல் நடைபயணம், கரூர், திண்டுக்கல், மதுரை வழியாக 28.02.1854ல் விருதுநகரில்

முகாமிட்டனர். **இராக்லாந்தின்** திட்டப்படி ஊழியங்கள் தொடர்ந்தன. கிராமம் கிராமமாக பிரிந்து சென்றனர். அநேக கிராமங்களில் **இராக்லாந்தை** துரத்தி கல் எறிந்தனர். நாயை வைத்து கடிக்க விட்டனர், பெண்கள் கூட கெட்ட கெட்ட வார்த்தைகளைப் பேசி திட்டினர். **இராக்லாந்து** பிலிப்பியர் நிருபத்தை அதிகம் வாசித்து தரைமட்டும் தன்னைத் தாழ்த்தக் கற்றுக் கொண்டார். ஊழியத்தின் பயனாக இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் சிறு கூட்டம் உருவாகி சபைகளும் தோன்றி பெருக ஆரம்பித்தன.

**இராக்லாந்து** சபைகளை மேற்பார்வையிட்டு ஊழியம் செய்ய இன்னும் ஒரு மிஷனரி தேவை என்று C.M.S. சங்கத்திற்கு தெரிவித்தார். லண்டன் C.M.S. சங்கம் அவர் ஆலோசனையை ஏற்று **Rev. சார்லஸ் எவ்ரி** என்ற 25 வயது நிரம்பிய வாலிபரை அனுப்பியது. **எவ்ரி** இராக்லாந்துடன் இணைந்து ஊழியங்களை உற்சாகமாக செய்து சபைகளை திடப்படுத்தி வளர்ச்சியடையச் செய்தார். ஆனால் இவைகள் 2 வருடம் தான் நீடித்தது. ஒருநாள் **எவ்ரி** காலரா நோயினால் பாதிக்கப்பட்டார். **இராக்லாந்து** இரவு முழுவதும் **எவ்ரியைக்** கவனித்தார். **எவ்ரி இராக்லாந்திடம் "என்னை மிகவும் நன்றாக கவனித்துக் கொண்டீர்கள், எனக்குத் தாகமாக இருக்கிறது. ஆனால் நான் எதுவும் குடிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். நான் இன்னும் சிறிது நேரத்தில் தாகமில்லாத நாட்டிற்குள் சென்று விடுவேன்"** என்று கூறினார். காலை 7.30 மணிக்கு தன் 27வது வயதில் **எவ்ரி** கர்த்தரின் பாதத்தில் சேர்ந்தார். இராக்லாந்து பனையடிப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு புளியமரத்தடியில் அவரை அடக்கம் பண்ணினார். **(18.08.1957)**

**Rev. பேரன் ப்ரூக்** (Baren Bruck) தன் மனைவி மற்றும் தன் சிறு குழந்தைகள் இருவருடனும் சுரண்டையில் ஊழியம் செய்தவர். தன் மனைவி இறந்ததால், மனைவியை சுரண்டையில் அடக்கம் செய்துவிட்டு, தன் இரு குழந்தைகளையும், இங்கிலாந்து சென்று, தன் மனைவியின் அண்ணனிடத்தில் ஒப்படைத்து விட்டு மீண்டும் சுரண்டை வந்தார். சிறிது நாட்கள் கழித்து, பெப்ரவரி **1858**ல் C.M.S. சங்கம் அவரை சிவகாசிக்கு **இராக்லாந்தின்** உதவிக்காக அனுப்பியது. மிகவும் சந்தோஷத்தோடு **இராக்லாந்துடன்** சேர்ந்து ஊழியம் செய்தார். வந்த அடுத்த மாதமே காலராவால் பாதிப்படைந்து மரணத்திற்கு சமீபமானார். கடைசியாக **இராக்லாந்திடம்** அவர் **"நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன், பிரிந்து போக ஆயத்தமாயிருக்கிறேன், அதையே விரும்புகிறேன். என் குழந்தைகளைப் பற்றி கவலையில்லை. ஆண்டவர் பார்த்துக் கொள்வார்"** என்று கூறினார். **இராக்லாந்து** சில வேத வசனங்களைச் சொன்னார். எந்த வேதனையும் இல்லாமல் **பேரன் ப்ரூக்,** தூங்கத் தொடங்கினார். தூங்கிக் கொண்டிருக்கும் போதே மரணத்திற்குள்ளானார். **இராக்லாந்து** ஆண்டவர் தந்த பலத்தினால் **பேரன் ப்ரூக்கையும்** பனையடிப்பட்டியில் **எவ்ரியை** அடக்கம் செய்த இடத்தின் அருகே அடக்கம் செய்தார். **பேரன் ப்ரூக்கின்** கல்லறை பனையடிப்பட்டியிலும், அவர் மனைவியின் கல்லறை சுரண்டையிலும் உள்ளது.

**இராக்லாந்து** தன் பணியைத் தொடர்ந்தார். உடலின் சுகவீனத்தைக் கண்டு கொள்ளாமல் கிராமம், கிராமமாக சென்று கிறிஸ்துவை அறிவித்தார். இருமல் அதிகரித்து சில சமயம் இரத்த வாந்தி எடுத்தார். உடலில் பலவீனம், **எவ்ரி** மற்றும் **பேரன்ப்ரூக்கை** இழந்த துக்கம் இவற்றின் மத்தியிலும் ஊழியங்களைத் தொடர்ந்தார். **Rev. மெடோஸ்** சுகவீனம் காரணமாக சென்னை

திரும்பிவிட்டார். **இராக்லாந்தும் ஃபென்னும்** இணைந்து ஊழியங்களைத் தொடர்ந்தனர். **ஃபென் இராக்லாந்து** சுகவீனமாய் இருக்கும் நேரங்களில் கடிதங்கள் எழுத உதவுவார். வேதாகமத்தை இராக்லாந்து கேட்கும்படி வாசித்துக் காண்பிப்பார்.

அன்று 22.10.1858ல் **இராக்லாந்து** நிலவு வெளிச்சத்தைப் பார்த்து விடிந்து விட்டது என்று நினைத்து அதிகாலை 3 மணிக்கு எழுந்து விட்டார். **ஃபென்னும்** விழித்து விட்டு விடிய நேரம் உள்ளது படுத்து உறங்குங்கள் என்றார், ஆனால் **இராக்லாந்து** வேதத்தை வாசிக்க உட்கார்ந்து விட்டார். பின்பு **இராக்லாந்தும், ஃபென்னும்** வரவு செலவு கணக்குகளை பார்த்தனர். சில கடிதங்களை எழுதி ஜெபித்தனர். **ஃபென்,** சில C.M.S. பத்திரிகைகளை வாசித்துக் காண்பித்தார். பின்னர் இருவரும் ஜெபிக்க முழங்காலிட்டனர். **இராக்லாந்து** சற்று சிரமப்பட்டார். ஜெபம் முடிந்ததும் வேகமாக குளிக்கும் அறைக்குள் சென்றார்.

**“தம்பி ஃபென் இங்கே வாருங்கள்”** என்ற உரத்த சத்தத்தைக் கேட்டு **ஃபென்** ஓடினார். அங்கு தான் கக்கிய ரத்தத்தைக் காட்டி, தம்பி, பயந்துவிடாதேயுங்கள் நான் கர்த்தரின் கரத்தில் இருக்கின்றேன் என்றார். **ஃபென் இராக்லாந்தை** கைத்தாங்கலாக கட்டிலுக்கு கொண்டு வந்தார். **இராக்லாந்து** சில வசனங்களை சொல்லி சிறு சிறு ஜெபங்களை செய்தார். சிறிது இரத்தம் கக்கினார். **ஃபென்னைப்** பார்த்து புன்முறுவல் செய்து **“இயேசு”** என்று சொன்னவாறு கட்டிலில் படுத்தார். அடுத்த விநாடியே இரட்சகரின் மார்பில் சாய்ந்தவராக நித்தியத்திற்குள் பிரவேசித்தார். **“இராக்லாந்தின் மரணம், எலியாவை தேவன் அக்கினி குதிரை, அக்கினி இரதம் மற்றும் சுழல் காற்றினால் பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டது போல் இருந்தது”.** மரணப்படுக்கையில் இருந்து கஷ்டப்பட்டால் சரிவர கவனித்துக் கொள்ள யாரும் இல்லாததால் முழு உணர்வுடன் ஜெபித்துக் கொண்டிருக்கும் நேரத்திலேயே எஜமான் தன்னிடத்தில் அழைத்துக் கொண்டார். **ஃபென்** அவரை பார்த்தப்படியே நாற்காலியில் அமர்ந்தார். **“நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய்”** என்று சொல்வது போல் இருப்பதை உணர்ந்தார். **இராக்லாந்தின்** உடலை அவர் விருப்பப்படி **எவ்ரி ஐயர்** மற்றும் **பேரன்ப்ரூக்** ஐயரை அடக்கம் செய்த இடத்தின் அருகில் அடக்கம் செய்ய விரும்பினர். மழை அதிகமாக இருந்ததால் சிவகாசியிலேயே ஒரு புளிய மர நிழலில் அடக்கம் செய்தனர்.

**“இராக்லாந்து என்றால் தொப்பியில் கூழ்வாங்கிக் குடித்தவர்” என்ற ஒற்றைவாசகம் மட்டுமே நம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும். இங்கிலாந்தில் பிறந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பட்டம் பெற்று, சகல வசதிகளோடு ஒரு பிரபுவைப் போல வாழ வேண்டியவர் அந்த சொகுசு வாழ்க்கையை அனுபவிக்காமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் வரும் பாடுகளே ஆசீர்வாதம் என்று உணர்ந்து, கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியம் கொள்ள, வெப்பம் மிகுந்த நம் பகுதிக்கு 31.12.1853ல் C.M.S. மிஷனரியாக வந்து பல பாடுகளையும் துக்கங்களையும் வேதனைகளையும் அனுபவித்து, 5 ஆண்டுகளில் அநேகருக்கு கிறிஸ்துவை அறிவித்து 22.10.1858ல் தமது 43வது வயதில் நம் மண்ணிலேயே உரமாகிப்போன நம் திருச்சபையின் முற்பிதாக்களில் ஒருவரான இராக்லாந்தையும் அவருடன் பணிசெய்த ஒவ்வொரு மிஷனெரிகளையும் நன்றியுணர்வுடன் நினைவு கூறுவோம்.**

தொகுப்பு : ***S. கிளாட்வின்,*** மில்லர்புரம், தூத்துக்குடி.

# ஷாலோம் - வேத வினாப் போட்டி 23

**பதில் எழுதுக :**

1. கெம்பீரத்தோடே அறுக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
2. "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" வாசிப்பதெங்கே?
3. யார் ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது?
4. "தன் ஆத்துமாவைச் சேதப்படுத்து–கிறான்" இவன் யார்?
5. நாயாகிய உமது அடியான் என்றவன் யார்?
6. மூன்று சிங்கங்களைக் கொன்ற பராக்கிரமசாலி யார்?
7. கொந்தளிக்கும் கடல் அலைகள் யார்?
8. ஞானதிருஷ்டியுள்ள புருஷன் என அழைக்கப்பட்டது யார்?
9. கப்பல்களைச் செய்த ஒரு ராஜா யார்?
10. தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறவர்கள் யார்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.05.2015**

**கடந்த ஏப்ரல் மாத வேத வினா போட்டி எண் 22க்கான சரியான விடைகள் :**

1. பொய் பேசுகிறவர்கள். – சங். 63:11
2. சூரியனைக் காண்பது. – பிர. 11 : 7
3. ஏசாயா 43 : 4
4. கர்த்தருடையது. – யோனா 2:9, சங். 3:8
5. கூஷ். – செப். 1 : 1
6. ஆவியானவர். – 1 கொரி. 2 : 10
7. மேகங்கள். – நாகூம் 1 : 3
8. தேவனுடைய வார்த்தை. – எபி. 4 : 12
9. மேடுகள். – சங். 72 : 3
10. கர்த்தர். – நாகூம் 1 : 2

**கடந்த மார்ச் மாத வேத வினாப் போட்டி எண் 22 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 28 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis.** செலின் ராணி டேவிட், கோவை. **2. Sis.** சுந்தரி விஜய பாஸ்கர், மார்த்தாண்டம்.
**3. Sis.** ஐடா பால் ஹெப்ரோன், மார்த்தாண்டம்

பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**
New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**

**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**

**Bro. Prabhakaran. P.**
C/o. Mr. P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**

SHARING LOVE MISSION Branch
Ebenezer Plaza, Parama Street,
WCC Junction,
Nagercoil - 629001
Cell : 9698444522

**MADURAI BRANCH OFFICE**

**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE**

**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**
Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9698244522**

இந்திய ஹாக்கி விளையாட்டு வீரர் தரம் சிங் ஹாக்கி விளையாட்டில் புதிய சாதனை படைத்துள்ளார். மலேசியாவில் போவில் அஸ்லான் ஷா கோப்கைக்கான 24வது சர்வதேச ஹாக்கி போட்டிகள் நடைபெற்றன. இதில் இந்திய ஹாக்கி அணி தென் கொரியாவை 4–1 என்ற கணக்கில் தோற்கடித்து வெண்கல பதக்கம் வென்றது. மேலும் இதில் விளையாடிய மட்பீல்டர் தரம் வீர்சிங் 100வது சர்வதேச போட்டிகளில் விளையாடி சாதனை படைத்துள்ளார்.

---

வேலூர் மாவட்டம் கூரம்பாடி கிராமத்தில் விவசாய நிலத்தில் மூடப்படாமல் இருந்த ஆள் துளைக் கிணற்றில் இரண்டரை வயது ஆண்குழந்தை 12.04.2015 அன்று விழுந்தது. இந்த குழந்தையை உயிருடன் மீட்க மீட்புப் பணிகள் அசுர வேகத்தில் சுமார் 8 ½ மணி நேரம் நடைபெற்றது. பின்னர் அந்தக் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது. ஆனால் மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற சிறிது நேரத்திலேயே சிகிட்சை பலனளிக்காமல் குழந்தை உயிரிழந்தது.

---

இந்தோனேஷியாவில் இளைஞர் ஒருவர் விமானத்தின் முன் சக்கரப் பகுதியில் மறைந்து கொண்டு பயணித்த சம்பவம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் இருந்து தலைதாதங் ஜதார்த்தாவு என்ற இடத்திற்கு சரக்கு விமானம் ஒன்று வந்தது. அந்த விமானம் தரையிறங்கிய பிறகு அதன் முன் சக்கரப் பகுதியில் இருந்து இளைஞர் ஒருவர் வெளியே வந்தார். அவரை காவல் துறையினர் கைது செய்து விசாரித்தபோது, சாகசம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறு பயணித்ததாக கூறினான்.

---

ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாக கண் நோய்களுக்கு பயன்படுத்தப்பட்ட வெங்காயம், வெள்ளைப் பூண்டு, மாட்டின் பித்த நீர் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட ஆங்கிலேயர்களின் நாட்டு மருந்தைக் கொண்டு, தற்போதைய சூப்பர்பக் எனப்படும் பெரும்பாலான நுண்ணுயிர் கொல்லி மருந்துக்குக் கட்டடுப்படாத நோய்க்கிருமிகளை அழிக்க முடியும் என நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். எம்ஆர்எஸ்ஏ என்ற நோய்க் கிருமிகளும் இந்த மருந்தினால் அழிக்கப்படுகின்றன.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## ஷாலோம் பணித்தளங்களில் புதிதாய் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஜனங்கள் கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளன்று திருமுழுக்கு பெற்ற காட்சிகள்




காச்லா, ஞன்கேடா மற்றும் அந்தர்வேலியா கிராம விசுவாசிகளுக்கு திருமுழுக்கு கொடுக்கும் போதகர். காளியா பாபோர், போதகர். அமர்சிங் கத்திஜா & போதகர். புர்சன் புரியா




மத்தியப்பிரதேசம் முண்டத், தேதலா கிராம விசுவாசிகளுக்கு திருமுழுக்கு கொடுக்கும் போதகர். பால் முனியா & போதகர். ரன்சிங் பாபோர்

## ஷாலோம் பணித்தளங்களில் புதிதாக ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து, ஊழியர் பயிற்சியினை முடித்துள்ள 45 பீல் சுதேச ஊழியர்கள்



அக்னி எழுப்புதல் ஊழியங்கள் நடத்தும்

# நீங்கள் பெலனடைந்து... சாட்சிகளாயிருப்பீர்கள்

அப்போஸ்தலர் 1 : 8

| நாள் | நேரம் |
| --- | --- |
| **மே-16-2015**<br>**சனிக்கிழமை** | **காலை 10.00 மணி முதல்**<br>**2.00 மணி வரை** |

இடம் : **அன்னை அருள் திருமண மண்டபம்,**
**கேம்ப் ரோடு, சென்னை**

தேவ செய்தி :

## பேராயர். V. தேவதாஸ்

அன்பு பகிர்வு இயக்கம், குஜராத்



***குடும்பமாய் பங்குபெற உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்...***

தொடர்புக்கு :

சகோ. ஸ்டாலின் ஜாண் மனுவேல் – Cell : 9789066449

சகோ. மோகன்ராஜ் – Cell : 9698844588

சகோ. ஜாண் ஜெயசிங் – Cell : 9698244577

**SHARING LOVE MISSION (SHALOM)**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.Phone: 0461 - 2375468, 2377737,
Cell : 9345675468 e-mail : info@shalommission.in